Annual Subscription Rs.100/-


# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 38   இதழ் - 3   மார்ச் - 2025

தனிப்பிரதி
ரூ.10/-





பண்டைய சிமிர்னா பட்டணத்தின் சின்னத்தை
நினைவு படுத்தும் கிரீடம் போன்ற எஞ்சிய பகுதி.

**ஜெபியுங்கள் !** **பங்குபெறுங்கள் !!**

# 25 – ஆம்

# வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

**"திருமறை தியானம்" தொலைக்காட்சி நேயர்கள்**

**& "திருமறை ஆசான்" வாசகர் கருத்தரங்கம்**

இடம் :

## YMCA வளாகம், ஏலகிரி மலை.

(திருப்பத்தூர் மாவட்டம்)

ஜோலார்பேட்டை சந்திப்பிலிருந்து சுமார் 22 கி.மீ.

திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ.

## நாள் : மே, 5, 6, 7 - 2025

(திங்கள், செவ்வாய், புதன்)

[ திங்கட்கிழமை காலை 11 மணிக்கு ஆரம்பமாகும்.]

**பதிவுக் கட்டணம்**

பெரியவர்கள் ரூ. 1350/–

சிறியவர்கள் ரூ. 1000 /–

**முன் பதிவுக்கு முந்துங்கள்**

**பதிவு செய்வது கட்டாயம்**

## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. நிறுவன ஆசிரியர் உரை | 3 |
| 2. நற்செய்தியின் உண்மைகள் | 11 |
| 3. பெண்கள் பகுதி | 13 |
| 4. வாலிபர் பகுதி | 16 |
| 5. சிறுவர் பகுதி | 20 |
| 6. லீதியாள் | 21 |
| 7. ஆலோசனை | 25 |
| 8. எபிரெயர் 2 ஆம் அதிகாரம்... | 28 |
| 9. பூமியையும் அதிலுள்ள சகல... | 32 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 38 March - 2025 Issue - 3

ஆசிரியர் உரை

## சிமிர்னா சபைக்கான இயேசுவின் நிருபம்

எ*பேசு சபைக்கான இயேசுவின் நிருபம்* என்று தலைப்பிட்டு நான் எழுதினதற்குப் பிறகு, சில கேள்விகள் முணுமுணுப்புகளோடு வந்து சேர்ந்தது. பவுலின் நிருபம், பேதுருவின் நிருபம், யோவான் நிருபம் என்பதெல்லாம் சரி, ***இயேசுவின் நிருபம்*** என்றழைப்பது எப்படி சரியாக இருக்குமென்று ? ஆனால், அப்படி அழைப்பது முற்றிலும் சரியானது என்பதே கருத்து. எப்படியெனில், மற்ற நிருபங்கள், ***அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறதாவது*** (1 தீமோ. 1:1,2), ***பேதுரு எழுதுகிறதாவது*** (1 பேதுரு 1:1,2), ***மூப்பனாகிய யோவான் எழுதுகிறதாவது*** (2 யோவான் 2) என்றே ஆரம்பிக்கின்றன. ஆனால், வெளிப்படுத்தலிலுள்ள நிருபங்கள் அப்படி ஆரம்பமாகவில்லை. ***எபேசு சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில்,*** (வெளி. 2:1), ***சிமிர்னா சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில்*** (வெளி. 2:8) என்று இப்படித்தான் ஏழு நிருபங்களும் ஆரம்பமாகிறது.

ஆக, இந்த நிருபங்களை எழுத வைத்ததும், எழுதுவதற்குத் தேவையானவைகளை யோவானுக்கு வெளிப்படுத்தியதும் இயேசு ஆண்டவர் தான். அப்போஸ்தலன் யோவான் ***தான் எழுதுவதாக*** எந்த இடத்திலும் குறிப்பிடுவதில்லை. இன்னும் சொல்லப்போனால், வெளிப்படுத்தல் 1:10,11-ல் நாம் இவ்விதமாக வாசிக்க முடியும் ***கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன், அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காள சத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன். அது: நான் அல்பாவும் ஓமெகாவும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன். நீ காண்கிறதை ஒரு புத்தகத்தில் எழுதி, ஆசியாவிலிருக்கிற எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா என்னும் பட்டணங்களிலுள்ள ஏழு சபைகளுக்கும் அனுப்பு என்று விளம்பினது.*** ஆகவே, இவைகளை

***இயேசுவின் நிருபங்கள்*** என்றழைப்பதில் எவ்விதத் தவறும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

சரி, வெளிப்படுத்தலிலுள்ள நிருபங்களின் வரிசையில், இரண்டாவதாக உள்ள ***சிமிர்னா சபைக்கான நிருபம்*** பற்றி நாம் இம்மாதம் பார்க்க உள்ளோம். சிமிர்னா சபைக்கு இயேசு எழுதின காரியங்களை நாம் சரியான அளவில் உள்வாங்குவதற்கு உதவியாயிருக்கும்படி, பண்டைய சிமிர்னா பற்றிய பின்னணித் தகவல்களைத் தருகிறேன். அதன் பிறகு, அந்நிருபத்தின் வரிகளுக்குள்ளாகச் செல்லுவோம்.

பண்டைய காலத்தில் புகழ்பெற்று விளங்கிய எபேசு பட்டணத்துக்கு வடக்கே ஒரு 50 மைல் தொலைவில், ஓர் இனிமையான சூழலில் அமைந்திருந்த பட்டணம்தான் சிமிர்னா. நவீன உலக வரைபடத்தில் இப்பட்டணம், துருக்கி நாட்டில் ***இஸ்மிர்*** என்று அழைக்கப்படுகிறது. அக்காலத்தில் இது மிகச்சிறந்த துறைமுகப் பட்டணமாக திகழ்ந்ததோடு, அன்றைய ஆசிய மைனரின் மிக முக்கியப் பட்டணமாகவும் விளங்கியது. ***ஏஜியன்*** கடல் பகுதியிலிருந்து ***பாகோஸ்*** (**Pagos**) மலை அடிவாரம் வரை இப்பட்டணம் நீண்டிருந்துள்ளது. இந்த நீட்சி வெகு நேர்த்தியாக பாவப்பட்ட சாலைகளைக் கொண்டிருந்துள்ளது. சாலைகளின் இரு மருங்கிலும் அழகான கோயில்களும், வேலைப்பாடுகள் கொண்ட கட்டிடங்களும் நிறைந்து காணப்பட்டதால், இவை ***சிமிர்னாவின் கிரீடம்*** என்றழைக்கப்பட்டுள்ளது. இது போதாதென்று, நகரத்திற்குள்ளாக பல சதுக்கங்களும், பொது பயன்பாட்டுக்கான கட்டிடங்களும், கேளிக்கை அரங்கங்களும், ஆங்காங்கே நூலகங்களும் இருந்துள்ளது. இன்னும், கடவுள்களின் ராஜா என்றழைக்கப்பட்ட **Zeus** – ***சீயஸ்*** கோவிலையும், ***சைபிலி*** (**cybele**) தேவதையின் கோவிலையும் இணைக்கும் சாலை ***தங்கச் சாலை*** என்றழைக்கப்பட்டது. மேலும், திபேரியு ராயன் காலத்தில் ***ரோமச் சக்கரவர்த்திகளுக்கான கோயிலும்*** இங்கு இருந்துள்ளதாகத் தெரிகிறது. இன்றைக்குள்ள ***இஸ்மிர்*** பட்டணம் பண்டைய சிமிர்னா பட்டணத்தின் மீது கட்டப்பட்டுள்ளதால் ஏனைய ஆறு பட்டணங்களின் எஞ்சிய இடிபாடுகளைக் காணமுடிவதுபோல் இப்பட்டணத்தின் இடிபாடுகளைக் காணமுடியவில்லை. பட்டணத்துக்கு வெளியே, ***அக்ரோபோலிஸ்*** பகுதியில் ***கிரீடம்*** போன்று தேற்றமளிக்கும் கட்டிடத்தின் ஒரு பகுதியும், அதைத் தாண்டி அகோரா (**Agora**) என்றழைக்கப்படும் சந்தைப் பகுதியின் இடிபாடுகளும் உள்ளது. அவ்வளவே !



**அகோரா (Agora) என்றழைக்கப்படும் சந்தை வெளி முகப்பு**

சிமிர்னா ஒரு சிறந்த துறைமுகப் பட்டணமாக இருந்தபடியால், ஏற்றுமதிக்கும், இறக்குமதிக்கும் எவ்விதக் குறைவுமிருக்கவில்லை. குறிப்பாக Myrrh என்றழைக்கப்படும் ***வெள்ளைப்போளத்திற்கு*** இப்பட்டணம் ***சிறப்பு காப்புரிமை*** பெற்றிருந்தது. இந்த வெள்ளைப் போளம் ஒரு நறுமணப் பொருள் என்பதைத் தாண்டி சில அரியவகைத் தன்மைகளைக் கொண்ட **ஒரு பொருளாகவும்** இருந்துள்ளது. குறிப்பாக, மரித்துப்போன உடல்களைப் ***பதப்படுத்தி***, மறுவாழ்வு வரைக்கும் பாதுகாப்பாக வைக்க வேண்டுமென்ற நம்பிக்கையினடிப்படையில் அக்காலகட்டத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு, இந்த வெள்ளைப் போளம்தான் ***முக்கிய மூலப் பொருளாக*** இருந்துள்ளது. அன்றைய உலகில் இத்தொழிலுக்கு பேர் போன எகிப்து போன்ற நாடுகளுக்கு சிமிர்னாவிலிருந்து தான் வெள்ளைப்போளம் ***ஏற்றுமதி*** செய்யப்பட்டுள்ளது. இந்த வெள்ளை போளம் ***இயேசுவின் பிறப்போடும், அவருடைய மரணத்தோடும் கூட*** ஒரு வகையில் சம்பந்தப்பட்டுள்ளது. ஆம், இயேசுவின் பிறப்பை அறிந்து, கிழக்கிலிருந்து நட்சத்திரத்தின் வழிநடத்துதலோடு சாஸ்திரிகள் கொண்டு வந்து குழந்தை இயேசுவுக்குப் படைத்த ***காணிக்கைகளில் ஒன்று வெள்ளைப்போளம்*** (மத். 2:11). இன்னும், இயேசு ஆண்டவர் மரணித்ததற்குப் பிறகு, அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு அவருடைய சரீரத்தை வாங்கிச் சென்ற போது, யூதருடைய முறைமையின்படி அடக்கம் செய்யப்படுவதற்காக, நிக்கொதேமுவால் கொண்டுவரப்பட்ட பொருள்களில் ***வெள்ளைப்போளமும், கரியபோளமும்*** அடங்கும். (யோவான் 19:38,39) இப்படி **Myrrh** என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் அரிய வகைப் பொருளான வெள்ளைப்போளத்தால் இப்பட்டணம் புகழ்பெற்றிருந்தபடியால் தான், இப்பட்டணம் சிமிர்னா (*Smyrna*) என்ற காரணப் பெயரால் அழைக்கப்பட்டதென்றும் நம்பப்படுகிறது.

இப்படிப் பல வகைகளிலும், நிலைகளிலும் சிறப்புகள் கொண்டிருந்த இப்பட்டணத்து வாசிகளின் வாழ்வில் காலத்தால் அழிக்க முடியாத ஒரு கசப்பான அனுபவம் சரித்திரத்தின் ஒரு கட்டத்தில் ஏற்பட்டது. ஆம், பண்டைய ***லிடியா*** பகுதியை ஆண்ட அரசர்களில் ஒருவனாகிய ***அட்டாலஸ்*** (*Attalus*) என்பவன் இப்பட்டணத்தை வெற்றி கொண்டு, இதை முற்றிலும் நாசப்படுத்தி ஒரு சிறு கிராமம் போல் ஆக்கிவிட்டான். இதினிமித்தம் இப்பட்டணத்து வாசிகள் தங்கள் அவல நிலையை எண்ணி மிகுந்த துக்கத்தோடு வாழ்ந்து வந்தனர். அதன் பிறகான ஒரு காலத்தில், ***கிரேக்க மன்னன் மகா அலெக்சாண்டர்*** இப்பகுதியை வெற்றி கொண்டு தன் ஆட்சி கொடையின் கீழ் கொண்டுவந்து, இடிந்து பாழாய்க் கிடந்த பட்டணத்தைத் திரும்பவும் எடுத்துக் கட்டி, சிறப்புகள் பல சேர்த்து, உலகின் மிகச்சிறந்த பட்டணங்களில் ஒன்றாக மாற்றினான்.

இது இப்பட்டணத்து வாசிகள் ஒவ்வொருவர் மனதிலும் ஆழமானதொரு உணர்வை ஏற்படுத்தியிருந்தது. ஆம், ஒரு காலத்தில் சிமிர்னராகிய நாம் **ஓஹோ** என்று இருந்தோம். பிறகு சரித்திரத்தின் ஒரு கட்டத்தில் ***ஒன்றுமில்லாமல்*** போனோம். இப்போது ***மீண்டெழுந்திருக்கிறோம்*** என்று. இதன் விளைவாக, அவர்கள் தங்கள் கலாச்சார நிகழ்வுகள், இலக்கியங்கள், நாட்டுப்புறப் பாடல்கள் என்று ஒவ்வொன்றிலும் தங்களின் இந்த உணர்வை வெளிப்படுத்திக் கொண்டே இருப்பார்கள். ஆம், வாழ்ந்தோம், வீழ்ந்தோம், எழுந்தோம் என்னும் வார்த்தைகள் அவர்கள் ஊனோடும், உயிரோடும் ஒன்றறக் கலந்திருந்தது. இவர்களின் இந்த உணர்வை இயேசு இவர்களுக்கான நிருபத்தின் அறிமுகத்தில் பயன்படுத்திக்கொண்டார்.

சரி, இப்பொழுது, நிருபத்திற்குள்ளாகச் செல்லுவோம்

**I. *சிமிர்னருக்கு இயேசுவின் அறிமுகம்***

வெளிப்படுத்தல் நூலிலுள்ள ஏழு சபைகளின் வரிசையில் இரண்டாவதாக வருவது தான் ***சிமிர்னா சபைக்கானது***. இந்த ஏழு நிருபங்களில், குறைவான வசனங்களைக் கொண்ட நிருபம் இதுதான். அறிமுகத்தைப் பாருங்கள்: சிமிர்னா சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில் முந்தினவரும், பிந்தினவரும், ***மரித்திருந்து பிழைத்தவருமானவர்*** சொல்லுகிறதாவது. இயேசுவானவர் ஏன் இப்படித் தன்னை அறிமுகம் செய்கிறார் என்று புரிகிறதா? இவர்களின் ஊனோடும், உயிரோடும் கலந்திருந்த ஓர் உணர்வைக் கண்டு, அதனடிப்படையில் இப்படிக் கூறுகிறார். இப்பட்டனத்தாருக்கு தங்கள் பட்டணத்தின் முந்தின நிலைமை மற்றும் பிந்தின நிலைமை பற்றித் தெரியும். இன்னும், மரிப்பது என்றால் என்ன, பிழைத்திருத்தல் என்றால் என்ன என்பதும் புரியும். எப்படியெனில், சிமிர்னா பட்டணத்தின் சரித்திரம் அப்படிப்பட்டது. இயேசு என்ன சொல்ல வருகிறார் என்பதை அப்படியே உள்வாங்கிக் கொள்வதற்கு இச்சொல்லாடல் அவர்களுக்கு மிகவும் உதவியாயிருந்திருக்கும்.

**II. *இயேசு அவர்களை அறிந்திருந்தார்.***

அடுத்த வசனத்தில், உன் கிரியைகளையும், உன் உபத்திரவத்தையும், நீ ஐசுவரியமுள்ளவனாயிருந்தும் உனக்கிருக்கிற தரித்திரத்தையும், தங்களை யூதரென்று சொல்லியும், யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும் ***அறிந்திருக்கிறேன்*** என்றுள்ளது. ஆம், இயேசு எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். அவருடைய பார்வைக்கு மறைவானது ஒன்றுமில்லை. இது அவரைப் பின்பற்றி வாழ்பவர்களுக்கு நம்பிக்கையையும், ஆறுதலையும் தர வேண்டும். அதே நேரத்தில் பயத்தையும், எச்சரிப்பையும் கொடுக்க வேண்டும். அப்படித்தானே!

துன்புறுத்தல், உபத்திரவம் இரண்டுமே கிட்டத்தட்ட சமமான பொருள்கள் தரும் வேறுபட்ட வார்த்தைகள். ஆயினும், இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. துன்புறுத்தல் என்பது ஒருவரின் ***நம்பிக்கை அல்லது அடையாளம்*** சார்ந்து எதிர்கொள்ள நேரிடும் சவால்கள். உபத்திரவம் என்பது ***முறையான முகாந்திரமில்லாமல் எதிர்கொள்ள நேரிடும் எல்லாச் சூழலையும்*** உள்ளடக்கியது. சிமிர்னா சபையார், முறையான முகாந்திரமில்லாமல் பாடுகளை எதிர்கொண்டிருந்தனர். இவைகள் எல்லாவற்றையும் இயேசு அறிந்திருந்தார்.

***உபத்திரவம்*** என்பது பண்டைய காலத்து ***தண்டனை முறைகளில்*** ஒன்று. சிமிர்னர்களின் காலத்தில் இருந்த உபத்திரவம் மூன்று அடுக்குகளைக் கொண்டிருந்தது. தண்டனைக்குள்ளான ஒரு குற்றவாளியை மரணத்துக்குட்படுத்துவதற்கு இம்முறையைப் பயன்படுத்துவார்கள். அதாவது, குற்றவாளியை மல்லாக்காகப் படுக்க வைத்து நெஞ்சின் மீது ***முதல் பாரத்தை*** ஏற்றுவார்கள். அதை அவன் தாங்கிக் கொண்டால், ***இரண்டாவது பாரத்தை*** ஏற்றுவார்கள். இதையும் தாங்கிக் கொண்டால், ***மிகக் கூடுதலான பாரத்தை*** ஏற்றுவார்கள். இந்தக் கூடுதலான பாரத்தோடு அவன் மூச்சு முடிந்து விடும். இது சிமிர்னா பட்டணத்தாருக்குத் தெரிந்த ஒன்று. இதை இயேசு அறிந்திருந்தபடியால், அவர்களுக்குப் புரியும்படியாக உன் உபத்திரவத்தை அறிந்திருக்கிறேன் என்றார். எப்படி அவர்கள் அறிந்திருந்த சரீர உபத்திரவம் மூன்று நிலைகளைக் கொண்டிருந்ததோ அதுபோல, இவர்களின் ஆவிக்குரிய உபத்திரவமும் மூன்று நிலைகளைக் கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலாவது பாரம், அவர்களின் ***தரித்திரம்.*** இவர்கள் ஆவிக்குரிய நிலையில் ***ஐசுவரியமுள்ளவர்களாயிருந்தாலும்***, சரீர வாழ்வில் கடுமையான வறுமையைச் சந்தித்தனர். எப்படியெனில், சிமிர்னா பட்டணத்தில் உள்ள ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு சங்கம் இருக்கும். இந்த, சங்கங்கள் ஒவ்வொன்றும் ஒரு தெய்வத்தைத் தங்கள் தொழில் பாதுகாவலனாகக் கொண்டிருக்கும். குறிப்பிட்ட தொழில் செய்கிறவர்கள், அச்சங்க உறுப்பினராக இருந்து அந்தத் தெய்வத்துக்கான வழிபாடுகளில் தங்களை ஈடுபடுத்த வேண்டும். ஒரு கிறிஸ்தவனால் இப்படிச் செய்ய முடியுமா? அப்போது என்ன நடக்கும்? தொழிற்சங்கங்களிலிருந்து வெளியேற்றப்படுவர். வேலை பறிபோகும், வருமானம் இருக்காது. தனியாகத் தொழில் தொடங்கினாலும் யாரும் வந்து வாங்க மாட்டார்கள். விளைவு? தரித்திரம். இதைத்தான் இயேசு குறிப்பிடுகிறார், பாவம் சிமிர்னா கிறிஸ்தவர்கள்!

இவர்கள் மீது ஏற்றப்பட்ட ***இரண்டாவது பாரம்***, தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைய

கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணம். நீரோ, டோமிஷியன் போன்ற ரோம ஆட்சியாளர்களின் கீழ் ***யூதர்களுக்கு*** விக்கிரக வழிபாடுகளிலிருந்தும், ***அரசர் வழிபாடுகளிலிருந்தும்*** விலக்களிக்கப் பட்டிருந்தது. அதன் மூலம் அவர்கள் ***யெகோவா வணக்கத்தைத்*** தடையில்லாமல் மேற்கொள்ளலாம். அக்காலத்தில், கிறிஸ்தவர்கள் ஒரு கட்டம் வரைக்கும் ***யூதர்களின் ஒரு பிரிவாகக்*** கருதப்பட்டனர். ஆகவே, ஜெப ஆலயத்தோடும், அங்கிருந்த யூதர்களோடும் கிறிஸ்தவர்கள் தொடர்பில் இருக்க முடிந்தது. ஆனால், காலப்போக்கில் நிலைமை மாறியது. கிறிஸ்தவர்களின் பக்தி வைராக்கியமும், பக்திச் செயல்பாடுகளும், குறிப்பாக அரச வணக்கத்தை கிறிஸ்தவர்கள் ஏற்க மறுத்ததும் ரோம ஆட்சியாளர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது அதினிமித்தம் அவர்கள் வேட்டையாடப்பட்ட போது, ஜெப ஆலயத்து யூதர்கள் ***கிறிஸ்தவர்களினிமித்தம் தாங்களும் துன்புறுத்தலுக்கு ஆளாகிவிடக் கூடாது*** என்று எண்ணி, தங்களைக் கிறிஸ்தவர்களிடமிருந்து அந்நியப்படுத்த ஆரம்பித்தனர். இதன் விளைவாக, நாங்கள் இந்தக் கிறிஸ்தவர்கள் போலல்ல என்று ஆட்சியாளர்களை நம்பவைக்கும்படியாய் எதிர்வினையாற்ற வேண்டிய கட்டாயமேற்பட்டது. இவர்கள் கிறிஸ்தவர்கள் ***மனித மாம்சத்தைத் தின்று, இரத்தத்தைக் குடிப்பவர்கள்.*** நாங்கள் ***அப்படியல்ல*** என்று கூறினர். அதாவது, கர்த்தருடைய பந்தியில் ***அப்பம், திராட்ச ரசம்*** பயன்படுத்துவதை வைத்து இப்படியாக யூதர்கள் இவர்களை ***தூஷித்தனர்.*** இன்னும், ரோமர்களுக்கும் , யூதர்களுக்கும் குடும்ப உறவு மிகவும் முக்கியம். அதனடிப்படையில் தான் ஒருவரை சகோதரர், சகோதரி என்று அழைப்பார்கள். ஆனால், கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை சகோதரர் சகோதரிகள் என்று அழைத்துக் கொண்டார்கள். இதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாமல் கிறிஸ்தவர்களை எக்குத்தப்பாகத் தூஷித்தனர். கிறிஸ்தவர்களுக்கெதிராக யூதர்களின் மனநிலை இப்படியிருந்ததை இயேசு அறிந்தபடியால் தான் ***தங்களை யூதரென்று சொல்லியும், யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும் அறிந்திருக்கிறேன்*** என்று சொல்லியுள்ளார்.

***மூன்றாவது பாரம்***, சிமிர்னா சபைக் கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தினிமித்தம் ***ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய*** ஒரு பாரமாக இருந்தது. ***நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்து நாள் உபத்திரவப் படுவீர்கள். ஆகிலும், மரணபரியந்தம் உண்மையாயிரு;***

***அப்போது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்*** (வெளி. 2:10)

அன்றைய நாட்களில் சிறைவாசம் எப்படியிருந்திருக்குமென்று உங்களால் ஊகிக்க முடிகிறதா? போதுமான உணவு கிடைக்காதது மட்டுமல்ல, காற்றும், வெளிச்சமும் அந்த அறையில் சுத்தமாக இருக்காது. மனித கழிவுகளின் துர்நாற்றத்தோடு நாட்களைக் கழிக்க வேண்டும். பிறகு இப்படி அடைக்கப்பட்டுள்ள குற்றவாளிகளின் உயிர் போகும்படியாய் கொடிய விலங்கினங்களுக்கு மத்தியில் வீசப்படுவதும், உயிரோடே பெருங்கூட்டத்திற்கு முன்பாக எரிக்கப்படுவதும் சர்வ சாதாரணம். அக்காலகட்டத்தில் பிரபலமான தேவ மனிதன் பாலிகார்ப் **(Polycorp)** இந்த விதமான மரணத்தைத் தான் தழுவி இரத்த சாட்சியாக மரித்தான் என்று பிற சரித்திரம் சான்று பகிர்கிறது.

இப்படியெல்லாம், உபத்திரவங்கள் அடுத்தடுத்து வரும்போது, முதல் நூற்றாண்டு சிமினர்களுக்கு என்ன நினைப்பு வரும்? நாம் ஏன் விசுவாசத்தை மறுதலிக்கக் கூடாது? என்றே எண்ணம் வரும். அதற்குத்தான் இயேசு தக்க பதிலை அடுத்து கொடுக்கிறார்.

### III. ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு ஜீவ கிரீடம்

வெளிப்படுத்தல் 2,3 அதிகாரங்களில் உள்ள ஏழு நிருபங்களுக்கும் பொதுவாக இருக்கும் அம்சங்களில் ஒன்று ஜெயங்கொள்ளு கிறவர்களுக்கு வாக்களிக்கப்பட்டிருக்கும் பலன். மற்ற சபையார்களைப் போலல்லாமல் ஜெயம் பெறுகிறவர்களுக்கு என்ன கிடைக்குமென்பது இங்கு முன்னமே வாக்களிக்கப்பட்டுள்ளது. ***ஆகிலும், நீ மரணபரியந்தம் உண்மையாயிரு; அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்*** என்று.

கிரீடம் என்பது சிமிர்னர்களுக்கு பரிச்சயமான ஒன்று. ஏனென்றால், அப்பட்டணத்தாரின் ***அடையாளச் சின்னமே கிரீடம்*** தான். அப்பட்டணத்துக்கு வெளியே இடிபாடுகளில் எஞ்சியிருக்கும் ஒரு பகுதி ***கிரீடம்*** போன்ற தோற்றத்தைக் கொண்டதாகவே இன்றளவும் உள்ளது. இன்னும் அன்றைய சிமிர்னா பட்டணத்து நாணயங்களில் கிரீடம் படம் பொறிக்கப்பட்டிருக்கும். மேலும், விளையாட்டுகளிலும், பண்டிகை காலப் போட்டிகளிலும் வெற்றி பெறுபவர்களுக்கு இளங் கிளைகளாலும், இலைகளாலும் கூடிய கிரீடம் வழங்கப்படும். அக்காலத்து ராஜாக்கள் விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட கிரீடங்களை அணிந்து கொள்வார்கள். ஆக, கிரீடம் என்பது அரசர் முதல் சாதாரண குடிமக்கள் வரை பழக்கத்தில் இருந்த ஒன்றாக இருந்திருந்தாலும், கிறிஸ்தவர்களுக்கும், கிரீடத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இருக்காது. காரணம், இவர்கள் அரைகுறை ஆடைகளோடு நடக்கும் விளையாட்டுப் போட்டிகளிலும்,

விக்கிரகங்களை முன்வைத்து நடக்கும் திருவிழாப் போட்டிகளிலும் கலந்து கொள்ள முடியாது. இச்சூழலில் ஏனைய பட்டணத்து வாசிகள் போல் தங்களுக்கு கிரீட வாய்ப்பில்லையே என்று கிறிஸ்தவர்கள் எண்ணியிருக்க வாய்ப்புண்டு.

இப்படியான மனநிலையோடு விசுவாசப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தவர்களுக்குத்தான் இயேசு நேர்த்தியாக வாக்களித்துள்ளார். ***ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்.***

ஜெயங்கொள்ளும்போது எபேசியர்களுக்கும், சிமிர்னர்களுக்கு கிடைக்கும் பலன் கிட்டத்தட்ட ஒன்றாக இருக்கிறதை நாம் கவனிக்கலாம். எபேசியருக்கு, ***ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன்*** என்றும், சிமிர்னர்களுக்கு, ***ஜீவ கிரீடத்தை உனக்கு தருவேன்*** என்றும் கூறுகிறார். அந்தந்த சபையாருக்கு இயேசு பயன்படுத்தியுள்ள வார்த்தைகளும், அவைகளின் பொருள்களும் அவரவர்களுக்குச் சுலபமாகப் புரிந்து கொள்ளக் கூடியவைகளாக இருந்துள்ளது.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் பக்தி ஓட்டத்தில், வெற்றியாளனாக இருக்க வேண்டுமென்றே இயேசு விரும்புகிறார். ஆகவே தான், தோற்றுப் போவது குறித்து அவர் எந்த நிருபத்திலும் பேசுவதில்லை. இன்னும், சிமிர்னர்கள், ஜெயம் கொள்ளும் போது, ***இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை*** என்றும் எழுதுகிறார். ***இரண்டாம் மரணம்*** என்பது ***அக்கினியும், கந்தகமும் எரிகிற கடல்*** என்று வெளிப்படுத்தல் 21:8-ல் வாசிக்கிறோம். அதாவது, அவர்களுக்கு நரகம் இல்லை என்கிறார் இயேசு.

ஆக, அருமையானவர்களே! எப்படி சிமிர்னா பட்டணத்தின் கிறிஸ்தவர்கள் பலவித உபத்திரவங்களுக்கு மத்தியில் வாழ்ந்தாலும், அவர்கள் மரணபரிந்தம் உண்மையாயிருக்கும்படி ஊக்கப்படுத்தப்பட்டார்களோ, அதுபோல் இயேசு நம்மையும் விசுவாசத்தில் உறுதியாயிருக்கும்படி அவருடைய புதிய ஏற்பாட்டு வார்த்தைகளின் மூலம் ஊக்கப்படுத்திக் கொண்டுள்ளார். ஆகவே, புதிய ஏற்பாடு போதிக்கும் உண்மையான சத்தியத்தைத் திறந்த மனதோடு ஏற்றுக்கொண்டு, ஒன்றான மெய்க் கிறிஸ்துவின் சபையில் அங்கமாகி, மரண பரியந்தம் உண்மையாயிருந்து, ஜீவ கிரீடத்தைப் பெற்று, இரண்டாம் மரணத்தைத் தவிர்த்து! என்றென்றும் அவருடனே கூட வாழ்வோம்! ஆமென்!! தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக !!!

†

பாடம் – 2

# நற்செய்தியின் உண்மைகள்

### சகோ. JC. சோட்

இயேசு கிறிஸ்து மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு கல்லறையில் இருந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்று வேதவாக்கியங்கள் தெளிவாகப் போதிக்கின்றன. இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் நடந்த இச்சம்பவங்கள் தான் நற்செய்தியின் உண்மைகளாக குறிப்பிடப்பட்டிருக்கின்றன. பவுல் தன்னுடைய கொரிந்து பட்டணத்து சகோதரர்களுக்கு எழுதும் போது அவைகளை ஒன்றன் பின் ஒன்றாகக் குறிப்பிடுகிறார். அது மாத்திரமல்ல, இங்கே பவுல் இந்த உண்மைகளுக்கும், அவர்களுடைய இரட்சிப்புக்கும் இடையே உள்ள தொடர்பைக் காட்டுகிறார். ***அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப் படுத்துகிறேன். நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத் திருக்கிறீர்கள்.***

நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக் கொண்டிருந்தால், அதினாலே இரட்சிக்கப்படுவீர்கள். மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்து வானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தார் (1 கொரிந்தியர் 15:1–4). வேறுவிதமாகச் சொன்னால், கிறிஸ்துவின் இந்த நற்செய்தி உங்கள் மீது நிலை நிற்கிறது. கிறிஸ்து மரித்திராவிட்டால், அவர் அடக்கம் பண்ணப் படாமல் இருந்திருந்தால், கல்லறையில் இருந்து உயிர்த்தெழாமல் இருந்திருந்தால், சுவிசேஷமே இருந்திருக்காது. அதனால் இரட்சி ப்பும் உண்டாயிருக்காது. ஆனால், இயேசு மரித்து, அடக்கம் பண்ணப் பட்டு, உயிர்த்தெழுந்தபடியால் சுவிசேஷத்திற்கான ஆதாரம் நமக்கு இருக்கிறது. இந்த சுவிசேஷம் தான் உலகையே மாற்றி விட்டது.

இப்போது நாம் நற்செய்தியின் உண்மைகளை ஒன்றன்பின் ஒன்றாக ஆழ்ந்து சிந்தித்து அது நம்மோடு எப்படி சம்மந்தப்படுகிறது என்று காண்போம்.

### கிறிஸ்துவின் மரணம்

கிறிஸ்து மரித்தார் என்று வேதாகமம் திரும்பத் திரும்பச் சொல்கிறது. தேவனுடைய வார்த்தை சொல்வதை நாம்

கவனிப்போம். ***கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்*** [பிலிப்பியர் 2:5-8]. என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும் படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும், கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம் [எபிரேயர் 2:9].

கிறிஸ்து யாருக்காக மரித்தார்? நாம் எபிரேயர் 2 :9 ல் கவனித்தபடி, அவர் எல்லோருக்காகவும் மரித்தார். அவர் பாவிகளுக்காக மரித்தார் என்று வேத வாக்கியங்கள் சொல்லுகின்றன. கவனியுங்கள்: ***நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்*** [ரோமர் 5:8]. ஆனால், அவர் ஏன் பாவிகளுக்காக மரித்தார்? இரட்சிப்பையும், நம்பிக்கையையும் அளிப்பதற்கு. ***எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவரா யிருக்கிறார்*** [1 தீமோத்தேயு 2:4].தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் [2 பேதுரு 3:9].

இதன் பொருள் யாரோ ஒருவர் உங்களுக்காகவும் எனக்காகவும் மரித்தார் என்பது. இதைக் குறித்து சற்று சிந்தித்துப் பாருங்கள். நாம் பாவிகளாகவும், தேவனுக்கு சத்துருக்களாகவும் இருந்து, அவருடைய கிருபைக்கும், இரக்கத்துக்கும் பாத்திரராக இல்லாத போது கிறிஸ்து நமக்காகப் பரலோகத்தை விட்டு, இந்தப் பாழாய் போன உலகத்திற்கு வந்து நாம் நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளும்படியாக நமக்காக அந்தக் கோரச் சிலுவையில் மரித்தார் [ரோமர் 5:6,7] . இயேசு கிறிஸ்து உலகத்தில் உள்ள எல்லோருக் காகவும் மரித்தார் என்பது ஆச்சரியமான காரியம் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். நாம் அவருக்கு எவ்வளவு நன்றி உள்ளவர்களாக இருக்க வேண்டும். அந்த நன்றி உணர்வு அவருக்குக் கீழ்ப்படிந்து, அவருக்கு உண்மையாய் இருக்க நம்மைத் தூண்ட வேண்டும்.

*தொடரும்...*

†

பெண்கள் பகுதி

# உன்னால் பிறர் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள் !

**Sis. ரேச்சல் இராஜநாயகம்**

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகள் அனைவருக்கும் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துக்களையும், ஸ்தோத்திரங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதமும் நாம் சேர்ந்து வசனங்களை தியானிக்க தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.

இத்தலைப்பை பார்த்தவுடன் நமக்கு மகிழ்ச்சியாய் இருக்கும். என்னால் பிறர் ஆசீர்வதிக்கப்படுகிறார்களா? அது எப்படி? அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? என்று இப்படி பல கேள்விகள் நம் உள்ளத்தில் வந்து போகும். நல்லது, வழக்கம்போல இக்கேள்விகளுக்கு பரிசுத்த வேதாகமம் என்ன பதில் நமக்கு வைத்திருக்கிறதென்று பார்ப்போம்.

முதலாவது, நீ ஒரு கிறிஸ்தவள்: பிறர் உன்னைப் பார்க்கும் போது உன்னில் கிறிஸ்துவைப் பார்க்கிறார்கள். இது சிந்திக்க வைக்கிறதல்லவா? என்னில் கிறிஸ்துவை பார்க்கிறார்களா? கிறிஸ்து என்னுள் இருந்தால்தானே பார்க்க முடியும். கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவளாக நான் வாழ்வதினால் என்ன நன்மை? கிறிஸ்து என்னுள் இருந்தால் ஆவிக்குரிய சிந்தை, அவிக்குறிய கனிகள் என்னில் காணப்பட வேண்டும். வேதாகமம் அவிக்குரிய கனிகள் என்று எவைகளைச் சொல்லுகிறது? அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம் விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம். நீ பிறரிடம் பேசும்போதும், பழகும்போதும் இந்த குணங்களை உன்னிடம் கண்டால் உன் மூலம் ஆசீர்வதிக்கப்படுவார்கள். எப்படியெனில், உன்னால் பிறர் தேற்றப்படுகிறார்களென்பது உனக்கு மகிழ்ச்சியைத்தானே கொடுக்கும்! உன்னுடைய பொறுமை, சகிப்புத்தன்மை பிறருடைய விசுவாசத்தை பலப்படுத்துகிறது.

இரண்டாவது, உலகத்தின் மிகப்பெரிய தேவை உன்னிடத்தில் இருக்கிறது. அது என்ன? என்று யோசிக்கிறீர்களா? அதுதான் ***சுவிசேஷம்.*** பவுல் கொரிந்தியருக்கு சுவிசேஷத்தின் மேன்மையைப் பற்றி கூறும்போது அதை ஒரு ***பொக்கிஷம்*** என்கிறார். ***இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்த பொக்கிஷத்தை***

***மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்*** (2 கொரி. 4:7). பவுல் தான் உடைந்து போகிற ஒரு மண்பாண்டம் போன்றவன் என்றும், ஆனாலும் தன்னையும் ஒரு பொருட்டென்று எண்ணி வல்லமையும், ஒளியும் நிறைந்த தேவனுடைய வார்த்தையாகிய சுவிசேஷத்தை என்னிடம் தந்துள்ளார். அதாவது இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் இவைகளைப் பற்றிய செய்திகள் ஒரு மனிதனுக்கு இரட்சிப்பைக் கொடுக்கிறது. இரட்சிப்பு சபைக்குள் வழிநடத்துகிறது. சபையில் இருந்தால் தான் தேவ திட்டத்தில் அங்கமாகி பரலோகத்தை சுதந்தரிக்க தகுதி பெறுகிறோம். ஆனால், உலகம் இந்த மாபெரும் உண்மை தெரியாமல் குருட்டுத்தனமாய், அர்த்தமற்று காரியங்களை நடத்திக் கொண்டுள்ளது. இவர்களைப் பார்த்து, பேசி, சுவிசேஷத்தை சொல்லி நித்திய வாழ்வை அவர்களும் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆசீர்வாதத்தை மண்பாண்டங்களாகிய நாம் செய்ய முடியும்.

மூன்றாவதாக, அநீதியான உலகத்திலே நீ நீதிக்காக நில்: கிறிஸ்தவர்களாகிய நம்முடைய முதுகெலும்பு ஆவிக்குரிய தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். அப்போதுதான் யார் தீமை செய்தாலும், அநீதியை தொடர்ந்து செய்தாலும் நீதியாகிய சத்தியத்திற்காக நிமிர்ந்து நேராக நிற்கமுடியும். நாம் தைரியமாய் நிற்பதும், நம்முடைய உறுதிப்பாடும் பிறரை ஊக்குவிப்பதோடு, ஆசீர்வாதமாய் இருக்கவும் உதவி செய்யும். அப். பவுல் மீண்டும் கொரிந்தியருக்குச் சொல்லும்போது (1 கொரி. 15:58) ***ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகிறவர்களாயும் இருப்பீர்களாக*** என்கிறார். ***முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள்*** (மத். 6:33) என்று இயேசு கிறிஸ்து போதிக்கிறார். நீதி என்பது அவருடைய வசனங்கள். ***உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள்*** என்று சங். 119:172–ல் வாசிக்கிறோம். வசனத்தின்படி வாழ்வதுதான் நீதி. வசனத்தின்படி வாழ்ந்தாலே பிறருக்கு நாம் ஆசீர்வாதமாய் இருப்போம்.

நான்காவதாக, நீங்கள் பேசும் வார்த்தைகள் தைரியமும், ஊக்கமுமாய் அமைந்து பாலைவனம் போன்று வாழ்பவர்களுக்கு ஒரு பாலைவனச் சோலையாய் இருக்க வேண்டும். கிறிஸ்தவர்களின் பேச்சு எப்பொழுதும் கிருபை பொருந்தினதாய் இருக்க வேண்டும் (கொலோ. 4:6) மற்றவர்கள் உங்கள் பேச்சை கேட்டு ஆறுதலையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும். இதில் சந்தேகத்திற்கிடமில்லாமல் தொடர்ந்து செய்து கொண்டேயிருக்க வேண்டும். வேதனையோடும், மனம் உடைந்துபோய் இருப்பவர்களை தூக்கி நிறுத்துகிறதாக நம்முடைய பேச்சு இருக்க வேண்டும்.

ஐந்தாவதாக, கிறிஸ்து உங்களுக்கு மேலங்கியாக இருக்க வேண்டும். அதாவது நம்மேல் கிறிஸ்துவை தரித்துக்கொள்ள வேண்டும். அப்.பவுல் 1 கொரி. 11:1–ல் கூறுகிறபடி, ***நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாய் இருங்கள்.*** நாமும் இவ்வாறு சொல்லும் தகுதியை பெற்றுக் கொள்ள வேண்டும். நம்முடைய சொல்லாலும், செயலாலும் பிறர் பரலோகத்திற்கு செல்ல சரியான வழியை காட்டுவதிலே எப்போதும் நாட்டமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். உன்னுடைய, என்னுடைய தாக்கத்தினால் யாராவது ஒருவர் நித்தியத்தில் பிதாவோடு என்றென்றும் இருக்க வேண்டும்.

அருமையானவர்களே! மேற்கண்ட ஐந்து வகை காரணங்கள் பிறர் நம்மூலம் ஆசீர்வாதம் பெற காரணமாய் இருக்கிறதென்று கவனித்தோம். இவைகளை நாம் செயல்படுத்தி, நாமும் மகிழ்ச்சியாய் இருப்போம். பிறரும் மகிழ்ச்சியும், ஆசீர்வாதமுமாய் இருக்க இன்றே முயற்சிப்போம். அதையே தேவனும், இயேசு கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் நம்மிடம் எதிர்பார்க்கிறார். அவ்வாறு செய்ய தேவன் உதவி செய்வாராக! ஆமென்!! ஆமென்!!!

✝

## நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்

*1] சோதனை வராமல் இருக்க - மாற்கு 14:38*

*2] கலகம் இல்லாமல் அமைதல் உள்ள ஜீவியம் செய்ய - 1 தீமோ 2:1,2*

*3] நமது சந்தோஷம் நிறைவாய் இருக்க - யோவான் 16:24*

*4] நிந்தை, துக்கமுகம் நீங்க - 1 சாமு 1:10-18*

*5] இருதயத்தில் தேவ சமாதானம் இருக்க - பிலி 4:6,7*

*6] மனுஷ குமாரன் முன்னால் நிற்க [வருகையில் காணப்பட] லூக்கா 21:36*

(சகோ. சம்மா – திருப்பத்தூர்)

**வாலிபர் பகுதி**

# கிறிஸ்தவ வாழ்க்கை

Dr. **ஏபில் நாயகம்**

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான வாலிபர்களே, உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்திலே வாழ்த்துக்கள். ஆவியிலும், சரீரத்திலும் சுகமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன் இந்த இதழின் வழியாக உங்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசெயர் முதலாம் அதிகாரத்தில் ஒரு சிறப்பான ஜெபம் செய்கிறார். அந்த ஜெபத்தை மையமாக வைத்து வாலிபர்களாகிய நாம் சில பாடங்களை கற்றுக் கொள்ள முயற்சி செய்யலாம். முதலாவது. அந்த ஜெபம் என்ன என்பதை வாசிக்கலாம். வசனம் 9 தொடங்கி.

...நீங்கள் எல்லா ஞானத்தோடும். ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய விருப்பத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும், எல்லாவித நல்ல செயல்களாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் வளர்ச்சியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக வாழவும் அவருக்குத் தகுதியாக நடந்துகொள்ளவும். சந்தோஷத்தோடுகூடிய எல்லாப் பொறுமையும் நீடிய சாந்தமும் உண்டாவதற்கு மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக ஜெபம் செய்கிறோம்‘

உண்மையாகவே மிக அற்புதமான ஒரு ஜெபம். இந்த ஜெபத்தை கவனிக்கும் பொழுது, கிறிஸ்தவ வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை ஒரு கோர்வையாக பவுல் எழுதியிருப்பதை நாம் வாசிக்க முடியும். முதலாவது, ஞானம் வேண்டும். அந்த ஞானம் இருந்தால் தான் தேவனுடைய சித்தத்தை அறிய முடியும், தேவனுடைய சித்தம் என்னவென்று புரிந்து கொண்டால் தான் அவர் எதிர்பார்க்கிற கனிகளை தர முடியும், கனி கொடுக்கும் ஒரு வாழ்வை வாழ்ந்தால் தான் அவருக்கு பிரியம் உண்டாக வாழ முடியும். அப்படி அவருக்கு பிரியமாய் வாழ முற்படும்பொழுது நிச்சயமாக சோதனைகளும் கஷ்டங்களும் வரும். அப்படிக் கஷ்டங்கள் வரும் பொழுது நமக்கு பொறுமையும் சாந்தமும் வேண்டும். இரண்டையும் அவருடைய வல்லமை நமக்கு தரும். அதைப் பெற்றுக் கொள்ளும் போது நாம் பலப்படுத்தப்படுவோம். ஆஹா என்ன அருமையான விளக்கம். கிறிஸ்தவ வாழ்க்கை இதுதான் என்பதை சுருக்கமாகவும் தெளிவாகவும் பவுல் இங்கே எழுதி இருக்கிறார்.

இப்பொழுது ஒவ்வொன்றாக நாம் பார்க்கலாம்.

**1. நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் -**

பிரியமான வாலிபர்களே, ஞானம் என்பது இரண்டு வகைப்படும். ஒன்று ***உலக ஞானம்*** இன்னொன்று ***ஆவிக்குரிய ஞானம்.*** உலக ஞானம் நமக்குப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. ஆவிக்குரிய ஞானமானது தேவனுடைய வார்த்தைகளினாலே கற்றுக் கொள்கிறோம். நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், இரண்டு ஞானமும் நமக்கு தேவைப்படுகிறது. ஆனால், தேவனுடைய சித்தத்தை தெரிந்து கொள்வதற்கு நமக்குத் தேவைப்படுகிற ஞானம், ஆவிக்குரிய ஞானம். பல நேரங்களில் உலக ஞானத்தை பெற்றுக் கொள்வதற்கு நாம் காட்டுகிற அக்கறையை விட ஆவிக்குரிய ஞானத்தை பெற்றுக் கொள்வதற்கு நாம் காட்டுகிற அக்கறை சற்று குறைந்தே காணப்படுகிறது. இரண்டுமே முக்கியம் என்ற புரிதல் நமக்கு வேண்டும். நம்முடைய நித்தியத்திற்கு தேவைப்படும் ஞானம் ஆவிக்குரிய ஞானமே.

ஆவிக்குரிய விவேகம் என்பது, எது சரி எது தவறு என்ற புரிதலை ஏற்படுத்துவது. பல நேரங்களில் எது சரி, எது தவறு என்ற கேள்விக்கான பதிலை நாம் உலக ஞானத்தின் உதவியோடு பெற்றுக்கொள்கிறோம். அப்படி செய்யும் பொழுது நாம் எல்லா நேரங்களிலும் சரியானதை தேர்வு செய்கிறோம் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. ஆனால், ஆவிக்குரிய ஞானத்தோடு நாம் பதிலை தேடும் பொழுது எப்பொழுதும் சரியான முடிவு செய்கிறவர்களாகவே இருப்போம். ஆக, ஒரு நல்ல கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்கு ஆவிக்குரிய ஞானமும், அந்த ஞானத்தினால் கிடைக்கும் விவேகமும் அவசியம்.

**2. 'அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும்**

நம்முடைய வாழ்க்கையில் யாருடைய சித்தத்தை, அல்லது விருப்பத்தை அறிய ஆசைப்படுகிறோம். யாருடைய விருப்பத்தை நிறைவேற்ற பிரயாசப்படுகிறோம் என்ற கேள்வி மிகவும் முக்கியமானது. தேவனுடைய ஞானம் மனிதனுடைய ஞானம் இவ்விரண்டிலும் சிறப்பானது எது என்பதை நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. கர்த்தருடைய விருப்பத்தை அறிந்து கொள்ளப் பிரயாசப்பட வேண்டும்.

தேவன் எதிலே பிரியப்படுவார், தேவனுடைய பார்வையிலே ஏற்றுக் கொள்ளப்படக்கூடியது எது என்றெல்லாம் நாம் கேள்வி கேட்கும் பொழுது தான் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற விரும்புகிறோம் என்று அர்த்தம். உமக்குப் பிரியமானதை செய்ய எனக்கு போதித்தருளும் என்று சங்கீதக்காரன் 143: 10 ஜெபிப்பதை போல, நாமும் அவருடைய சித்தத்தை அறிந்து கொள்ள, அறிந்து அதின்படி நடக்க நம்மை ஒப்புக் கொடுப்போம்.

**3. சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து‘**

கனியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை என்பது தேவனுடைய எதிர்பார்ப்பாக இருக்கிறது. கனி கொடுக்க வேண்டும் என்றும், கனி கொடுத்தல் அவசியமென்றும், கனி கொடாமல் இருந்தால் கிடைக்கும் தண்டனை என்ன என்றும் ஆண்டவராகிய இயேசு தனது ஊழிய நாட்களில் பிரசிங்கத்திருக்கிறார். நாம் கனி கொடுக்க வேண்டும் என்றால் திராட்சை செடியாகிய அவரில் நாம் நிலைத்திருக்க வேண்டும். நம்மில் கனிகள் இல்லை என்று சொன்னால், நாம் அவரில் நிலைத்திருக்கவில்லை என்றுதான் அர்த்தம். நல்ல மரம் கெட்ட கனிகளைத் தராது. அதைப்போல கெட்ட மரமும் நல்ல கனிகளைத் தராது. எனவே, நாம் கனிகளினாலே அறியப்படுகிறோம். நாம் நற்கிரியைகளை செய்வதற்காகவே கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக படைக்கப்பட்டிருக்கிறோம் என்று எபேசியர் 2:10 இல் வாசிக்கிறோம்.

**4. தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும்.‘**

இந்த வசனத்தில் இருக்கும் வார்த்தை பயன்பாட்டை நாம் கவனிக்க வேண்டும். அறிவில் விருத்தி என்பது வெறும் தெரிந்து கொள்வதோடு முடிவடைவது அல்ல. தேவனை பற்றிய அறிவு நம்மை அவரிடம் சேர்க்கிறது. ஆனால், அவரைப் புரிந்து கொள்ளவும், அவரோடு ஆவிக்குரிய உறவில் இருக்கவும், வெறும் அறிவு மட்டும் போதாது. எந்த அறிவு நம்மை அவரிடம் கொண்டு சேர்த்ததோ, அந்த அறிவு பெருகி விருத்தி அடையும் பொழுது நாம் அவரோடு உறவு கொள்ள முடியும். அப்பொழுதுதான் அவருக்குப் பிரியமாக பாத்திரராக நாம் வாழ முடியும். பிரியமாக நடந்து கொள்வது என்பது ஆவிக்குரிய காரியங்களில் மட்டும் அல்ல. அன்றாட வாழ்விலும். தனிப்பட்ட வாழ்விலும், ஒழுக்கத்திலும் கறையற்றவர்களாக இருப்பது.

**5. சந்தோஷத்தோடே கூடிய எல்லாப்பொறுமையும், நீடியசாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும்:**

அடுத்ததாக, மிகவும் தேவையான ஒரு காரியம் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் பேசுகிறார். அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாய் இருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் என்று. ஆவிக்குரிய ஞானத்தை பெற்று, விவேகமாய் நடந்து தேவனுடைய சித்தத்தை தெரிந்து கொண்டு, அவருக்கு பிரியமாய் கனி கொடுத்து வாழ நாம் நினைக்கும் பொழுது நமக்கு சோதனைகளும் கடினமான நேரங்களும், நிந்தைகளும் அவமானங்களும் வரும். யாக்கோபிலே சோதனைகள் நமக்கு பொறுமையைக் கற்றுத் தருகிறது என்று வாசிக்கிறோம். இந்த

வசனத்தில் நாம் வாசிக்கிறபடியாக நமக்கு தேவையான பலத்தை அவருடைய வல்லமை மட்டுமே நமக்குக் கொடுக்க முடியும். நம்முடைய வல்லமை, நம்முடைய திட்டங்கள், நம்முடைய அறிவு இவைகளை வைத்து நமக்கு தேவையான பலத்தையும். பொறுமையையும். நீடிய சாந்தத்தையும் நாம் பெற்றுக்கொள்ள முடியாது.

ஆக, பிரியமானவர்களே! இந்த ஜெபம் பவுலாலே கொலொசே பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு ஏறெடுக்கப்பட்ட ஒன்றாக இருந்தாலும், நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை சுருக்கமாக கற்றுக் கொள்ள உதவி செய்திருக்கிறது. இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, ஞானத்தை வளர்ப்போம். தேவ சித்தம் அறிவோம். நற்கனிகளைக் கொடுப்போம். பாத்திரவான்களாக நடப்போம், சோதனைகளை ஜெயிப்போம். தேவனுடைய வல்லமையினால் பலப்படுவோம். தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக!

✝

## எப்பொழுதும் - தேவன்

1. ***எப்பொழுதும் தேவன் நம்மை காக்கின்றார்***
   *[சங்கீதம் 40:11]*

2. ***எப்பொழுதும் சகல விதத்திலும் தேவன் சமாதானத்தைத் தருகிறார்.***
   *[2 தெசலோனிக்கேயர் 3:16]*

3. ***எப்பொழுதும் தேவன் நம் மேல் அவர் கண்களை வைக்கிறார்***
   *[உபாகமம் 11:12]*

4. ***எப்பொழுதும் தேவன் நமக்கு வெற்றி தருகிறார்***
   *[2 கொரிந்தியர் 2:14]*

[சகோ. சம்மா – திருப்பத்தூர்]

சிறுவர் பகுதி

# தேவனுடைய சர்வாயுதவர்க்கம்.

Dr. *பிரெய்ஸி*

**ஹெ**லோ குழந்தைகளே! நீங்கள் அனைவரும் நன்றாக இருப்பீர்கள் என்று நம்புகிறோம். எங்கள் கட்டுரைகளை ஒவ்வொரு மாதமும் படித்து வருகிறீர்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம். இம்மாதம் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைப் பற்றி பார்ப்போம்.அன்பான குழந்தைகளே, நாம் உடல் ரீதியாக சாத்தானை எதிர்த்துப் போராட முடியாது. ஆனால், நமது பக்திக்குரிய எண்ணங்கள் மற்றும் விசுவாசச் செயல்களால் சாத்தானை தோற்கடிக்க முடியும்.

மேலே காணும் நோக்கத்திற்காகவே நமது அன்பான கடவுள் இந்த சர்வாயுதவர்க்கத்தை நமக்குக் கொடுத்துள்ளார்.

***சத்தியம்*** என்னும் கச்சையை நாம் நம் இடுப்பில் அணிய வேண்டும். ***சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய*** ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே அணியவேண்டும். ***விசுவாசமென்னும் கேடகத்தைப்*** பிடித்து நிற்க வேண்டும். ***இரட்சணியமென்னும்*** தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுக்க வேண்டும்.

அன்புள்ள குழந்தைகளே, மேற்கூறியவற்றிலிருந்து நீங்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், நீங்கள் தேவனின் வார்த்தைகளைக் கற்றுக்கொண்டு புரிந்துகொள்ள வேண்டும். மேலும், அவற்றை எப்போதும் உங்கள் அன்றாட நடவடிக்கைகளுக்கு அடிப்படையாக வைத்திருக்க வேண்டும்.தேவனின் கவசத்தை அணிந்துகொள்வதன் மூலம் நாம் தீமையை எதிர்த்துப் போரடி வெல்ல முடியும். மேலும், தேவனின் குழந்தைகளாக நம் ஒளியைப் பிரகாசிக்கச் செய்யமுடியும்.




**With love**
**Praisey akka**

†

# லீதியாள்

*சகோ. KM. பிலிப் - பவானி*

**கி**றிஸ்துவுக்கு பிரியமான ஆசானின் நேயர்களுக்கு, இன்ப இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அனுதினமும் ஆவிக்குரிய வாழ்க்கையில் பலப்பட, மற்றவர்களுக்கு முன் பிரகாசிக்க, வேதம் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை அநேக முன் மாதிரிகளை நமக்கு முன் வைத்திருக்கிறது. அதிலும் சிறப்பாக புதிய பிரமாணத்திற்குட்பட்டவர்களாகிய நமக்கு புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த ஆதித்திருச்சபையாரின் வாழ்க்கையையே முன்மாதிரியாய் நமக்கு முன் நிறுத்துகிறது. இரட்சிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கைகளை அப். 2:42 –ல், 3000 பேர் என்றும், 4:4–ல் 5000 பேர் என்றும், 5:14–ல் திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களானார்கள் என்றும் 6:7–ல் தேவ வசனம் விருத்தியடைந்து சீஷர்களுடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று என்றும் 11:21–ல் கர்த்தருடைய கரம் அவர்களோடே இருந்தது; அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி கர்த்தரிடத்தில் திரும்பினார்கள் என்று வேதம் இரட்சிக்கப்பட்டவர்களின் ஆச்சரியமான வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது. அதுமட்டுமல்ல, ஸ்தேவான், சவுலாகிய பவுல், எத்தியோப்பிய மந்திரி, தபீத்தாள், நூற்றுக்கு அதிபதி கொர்நெலியு, லீதியாள், சிறைச்சாலைக்காரன் என்று தனிப்பட்ட ஒரு ஆத்துமாவின் விலையேறப்பட்ட இரட்சிப்பையும் நமக்குச் சுட்டிக்காட்டுகிறது.

இதில் இன்று கி.பி 47–ல், சிறிய ஆசியாவிலுள்ள தியத்தீரா ஊராளும், பிலிப்பிப் பட்டணத்தில் வசித்து வந்தவளுமான லீதியாளின் ஆவிக்குரிய வாழ்க்கை குறித்து ஆராய்ந்து அறிவது நம்முடைய ஆத்துமாவுக்கு பெலன் தரும். லீதியாள் பற்றி அப் 16–ல், 14,15,40 ஆகிய மூன்றே வசனங்களில் சுருக்கமாய் சொல்லப்பட்டிருந்தாலும், இவளது பக்தி வாழ்க்கை நம் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு ஒரு தூண்டுகோலாய், ஊன்றுகோலாய், அமையும். யூத ஸ்திரீயாகிய இவள் பழைய பிரமாணத்தின்படி தேவனை வணங்குவதில் ஆர்வமுடையவள். பவுலால் போதிக்கப்பட்டு மெய் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றவள். இவளது பக்திக்குரிய வாழ்க்கையில் நாம் அறிந்து கொள்ள வேண்டிய சில பண்புகளை கவனிப்போம்; கற்றுக் கொள்வோம்.

முதலாவது பண்பு சபை கூடி வருவதை வழக்கமாக்கிக் கொண்டவள். பவுலும், தீமோத்தேயுவும் பிலிப்பி பட்டணத்தில் தங்கியிருந்தபோது, பட்டணத்திற்கு வெளியே போய், ஆற்றினருகே ***வழக்கமாய்*** ஜெபம் பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து அங்கு கூடி வருகிற ஸ்திரீகளுக்கு உபதேசித்தார்கள். அவர்களில் ஒருவளாக லீதியாளும் அங்கு உட்கார்ந்து பவுல் சொல்வதைக் கேட்டாள். சபை கூடி வந்த இச்செயலில் நாம் கவனிக்க வேண்டியது, ***வழக்கமாக கூடி வந்ததில்*** ஒரு ஒழுங்கு தெரிகிறது. பட்டணத்துக்கு வெளியே, அமைதியான ஆற்றங்கரை என்பது ஊரை விட்டு சற்று தூரமாகத்தான் இருந்திருக்கும். சபை கூடி வந்த இவர்களுக்கு தூரம் ஒரு பொருட்டாக இல்லை. சபை கூடிய இடத்தில் ஒரு வீடோ, சபைக் கட்டிடமோ இருக்க வாய்ப்பில்லை. ஆனால், இவர்களிடத்தில் சபை கூடி வரவேண்டும் என்ற ஓர் உன்னத ஒழுங்கு, விருப்பம் இருந்ததை நாம் பார்க்கிறோம். இவர்களோடு நம் சபை கூடி வருதலை ஒப்பிட்டுப் பாருங்கள். இந்நாட்களில் சபை கூடி வரும்படியாய் நேரமோ, தூரமோ, பயணமோ, கட்டிட வசதியோ ஒன்றுக்கும் நமக்கு குறைவில்லை. சபை கூடி வருவதில் நம் மனமே குறைவுள்ளதாய் காணப்படுகிறது. தேவ கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வாரத்தின் முதல் நாளில் சபை கூடி வருவதில் நம் பக்தி வைராக்கியம் குறைவுள்ளதாயுள்ளது. சாக்குப் போக்குகள் சொல்லி தவறுகளைத் தட்டிக்கழிக்கிறோம். இதில் லீதியாளின் முன்மாதிரியை தயவுசெய்து கவனிங்கள். இங்கு இவளுடைய தொழில் செய்வதற்கு எல்லா நேரமும் தேவையானதாகவும், அதன் மூலம் நல்ல வருமானத்தை ஈட்டக் கூடியதாகவும் இருந்தது. உண்மையில் இவளுக்கு காலம் ***பொன் போன்றதாகும்***. ஆனாலும், ***அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும் நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்*** [சங். 119:72] என்பதை நன்கு புரிந்து கொண்ட பக்தியுள்ள லீதியாள் குடும்பமாக சபை கூடி வந்து பவுலின் மூலம் கிடைத்த தேவ ஆலோசனைகளை உன்னிப்பாகக் கவனித்தாள், ***கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்***. இதன் மூலம் இவளும் இவள் குடும்பத்தாரும் இரட்சிக்கப்பட்டார்கள். இது எவ்வளவு பெரிய பொக்கிஷம்! ஆசீர்வாதம்!! மகிழ்ச்சி!!! என்பதை சிந்தித்துப் பாருங்கள். நாமும் சபை கூடி வருவதில் ஒருமனப்பட்டவர்களாய் முழு இருதயத்தோடு தேடி வருவோமானால், இருதயத்தை ஆராய்ந்து பார்க்கிற நம் தேவன், நம் தேவைகள் எல்லாவற்றையும் சந்திப்பார் [சங். 34:10]. நாம் விதைக்கலாம், நடலாம். நீர்ப்பாய்ச்சலாம்; ஆனால், விளையச் செய்கிறவர் – ***தேவனே*** என்பதை தெளிவாய்ப் புரிந்து கொண்டு தேவனைத் தேடுவதற்கு முதலிடம் கொடுப்போம்.

இரண்டாவதாக, லீதியாள் மிகச்சிறந்த உழைப்பாளி. இவள் செய்யும்படியாய் தெரிந்து கொண்ட வேலை, மிக ஞானமானதும், விலையுயர்ந்ததுமான இரத்தாம்பரம் தயாரித்து விற்பனை செய்யும் தொழிலாகும். இரத்தாம்பர நூலில் தயாரிக்கப்பட்ட மூடுதிரைகள் தேவாலய வாசல்களில் அழகாய் தொங்க வைக்கப்பட்டன [யாத் 36:8]. ஆகாஸ்வேரு ராஜாவால் உயர்த்தப்பட்ட மொர்தெகாயும், பெல்ஷாத்சார் ராஜாவால் பாராட்டப்பட்ட தானியேலும் இரத்தாம்பர சால்வை அணியப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள் [எஸ். 8:15; தானி. 5:29], புதிய ஏற்பாட்டில் இயேசு சொன்ன லாசரு ஐசுவரியவான் உவமையில் கூட வாசிக்கிறோம். ஐசுவரியவான் விலை உயர்ந்த இரத்தாம்பரம் வஸ்திரம் தரித்திருந்தான் என்று இப்படிப்பட்ட விலைமதிப்புள்ள ஒரு வேலை செய்து, லீதியாள் தன் குடும்பத்தை திருப்தியாய் போஷித்திருக்கிறாள். இதன் மூலம் இவள் ஒரு சிறந்த உழைப்பாளி என்பது விளங்குகிறது. உழைப்பவர்களை தேவன் விரும்புகிறார். முதல் மனிதன் ஆதாமைப் படைத்த தேவன் அவனை அந்த ஏதேன் தோட்டத்தை, ***பண்படுத்தவும், காக்கவும் வைத்தார்*** [ஆதி. 2:15] என்பதில் மனிதன் உழைக்க வேண்டும் என்பதை தேவன் விரும்பினார் என்பது விளங்குகிறதல்லவா ?

இதைத்தான் ஞானி நீதிமொழிகள் 31–ல், 13 முதல் 31 முடிய ஒரு குணசாலியான ஒரு ஸ்திரீயின் பண்புகளில் உழைப்பின் மேன்மையைப் பாராட்டுகிறார். அவள் தன் கைகளினால் உற்சாகத்தோடு வேலை செய்கிறாள். அவள் ஒரு வியாபாரக் கப்பல்; தன்னை பெலத்தால் இடைக்கட்டி தன் கைகளைப் பலப்படுத்துகிறாள். இரவிலே அவள் விளக்கு அணைவதில்லை. ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டுகிறாள். வருங்காலத்தைப் பற்றியும் மகிழுகிறாள். தன் வீட்டுக் காரியத்தின் மேல் கண்ணோக்கமாயிருக்கிறாள். சமுதாயத்தில் கணவனுக்கு பெருமை சேர்ப்பதில் கவனமாயிருக்கிறாள். இப்படிப்பட்ட ஒரு சிறந்த, முன்மாதிரியாய் தன் குடும்பத்திற்காக உழைத்ததால்தான், லீதியாள் தன் குடும்பத்திற்கு சத்திய வழியை காட்டியதும், அவர்கள் அதைப் பிடித்துக் கொண்டு உடனே கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டதும். குணசாலியான அவள் தன் ஆன்மீக வீட்டைக் கட்டினாள். பிரியமானவர்களே ! உழைப்பின் மேன்மை ஆண், பெண் இருபாலருக்கும் பொருந்தும். ***ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது*** [II தெச. 3:10], நினைவில் வையுங்கள் – லீதியாள் போல தேவன் தனக்குக் கொடுத்த குடும்பத்தை பக்தியுள்ள குடும்பமாகக் காத்துக் கொள்வதும் மிக உன்னதமான உழைப்பாகும்.

***மூன்றாவதாக*** லீதியாள் வசனத்தை விருப்பத்தோடு கேட்டாள். இன்னும், போதிக்கப்பட்ட உபதேசத்தைக் கவனமாய் கேட்டாள். பக்தியுள்ள இவள் இருதயம் புதிய பிரமாணமாகிய சுவிசேஷ செய்தி கேட்டு பகுத்தறியத்தக்கதாகத்தான், ***கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்*** என்று பார்க்கிறோம். ***நான் யூதப் பெண், நான் பக்தி உள்ளவள், எனக்கு எல்லாம் தெரியும்*** என்று இவள் பெருமையால் சபையை இழந்து விடவில்லை. கிடைத்த ஆவிக்குரிய உபதேசத்தை ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிந்து குடும்பமாக சபைக்குள் பிரவேசித்தாள். நமக்கும் தேவன் புதிய பிரமாணத்தின் போதனைகளை வேதத்தின் மூலம் கொடுத்திருக்கிறார். தனித்தியானம், குடும்பமாக, சபையாக வேதத்தைக் கேட்கவும், தியானிக்கவும்,பகுத்தறியும்படியான வாய்ப்புகளை தேவன் கூட்டிக் கொடுத்திருக்கிறார். ***அழிவுள்ள வித்தினாலே அல்ல. என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம்*** [1 பேதுரு 1:23]. நித்தியமான இந்த ஜீவ வசனங்களே நம்மை நித்தியத்தில் கொண்டுபோய் சேர்க்கும். ஆகவே, நாம் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, லீதியாள் போல் அதன்படி செய்ய நம்மை ஒப்புக் கொடுப்போம். பக்திக்குரிய லீதியாள் ஊழியர்களை தன் வீட்டில் ஏற்று உபசரித்து கனப்படுத்தியதால் [அப்.16:15,40] தேவனும் லீதியாளின் பெயரை ஜீவபுத்தகத்தில் எழுதி கனப்படுத்தியுள்ளார். நாமும் நம் பக்தி வாழ்க்கையின் எல்லா நிலையிலும் ஜெயங்கொள்ளுகிறவர்களாய் வாழ்வோமேயானால் நம் பெயர்களும் ஜீவபுத்தகத்தில் எழுதப்படும். ஆமென் !!

†

## நாம் மரித்தோம்

*1] நியாயப்பிரமாணத்துக்கு மரித்தோம்.....*
*[ரோமர் 7:6]*

*2] விருத்த சேதனமில்லாமையினால் மரித்தோம்.....*
*[கொலோசெயர் 2:13]*

*3] பாவத்துக்கு மரித்தோம்.....*
*[எபேசியர் 2:1,5]*

*4] இவ்வுலக வழிபாடுகளுக்கு மரித்தோம்.....*
*[கொலோசெயர் 2:20, கலாத்தியர்4:3]*

[சகோ. சேகர் – திருப்பூர்]

# ஆலோசனை

## *Bro. பாண்டியன்*

இன்றைய காலத்தில் எல்லாவற்றிற்கும், அதாவது குடும்பம் நடத்த, மனநிலை சரியாக, வியாபாரம் செழிக்க, மேற்படிப்பு மற்றும் சட்டம், மருத்துவம் என்று அனைத்திற்கும் உலகில் ***ஆலோசனை*** உண்டு. ஆனால், இவைகள் எல்லாம் அற்ப பிரயோஜனமுள்ள சரீர முயற்சிகளே. ஆனால், தேவபக்தி மூலம் கிடைக்கும் ஆலோசனைகளே. இம்மைக்கும் மறுமைக்கும் ஏற்றதாய் இருக்கிறது. சிறிய வயதினர் பெற்றோர் ஆலோசனையைக் கேட்டு நடக்கும்போது முதிர் வயது வரை அது உதவியாய் இருக்கும் [நீதி. 1:8–19:20] மாறாக, ஆலோசனையை மதியாதவர்கள் ஆபத்தில் சிக்கி சீரழிவார்கள் [நீதி. 1:25,26] செவி கொடுத்தால் வாழ்க்கையில் கவலையில் சிக்காமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணலாம் [நீதி. 1:33] என்கிறார் ஞானி சாலமோன்.

வேதாகமத்தில் மூன்றுவித வழிகளில் ஆலோசனைகள் உண்டு என்று காண்கிறோம் 1. பிசாசு, 2 மனுஷர் மூலம், 3 தேவ ஆலோசனை. ***முதலாவது பிசாசின் ஆலோசனை :*** ஆதியாகமம் 3:1–6ல் தன் வஞ்சகமான ஆலோசனையால் தேவக் கட்டளையை மீறச் செய்கிறான் பிசாசு. இதற்கும் இப்போது இருக்கும் சபையாருக்கும் என்ன சம்பந்தம் ? என்று கேட்டால் பவுல் சொல்வதைக் கவனியுங்கள், 2 கொரி. 11:3 அதுபோல உங்கள் மனதும் கிறிஸ்துவை விட்டு விலகும்படி கெடுக்கப்படுமோ என்று பயப்படுகிறேன். ஆக, நம் ஆண்டவர் உபதேசத்தைக் கேளாமற்போன யூத ஜனங்களைப் பார்த்து சொல்கிறார், அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறான் என்று [யோவான் 8:44] இன்றும் விசுவாசி, சபைக் கூடுதல், சகோதர ஐக்கியம், பரிசுத்த வாழ்வு, பிறரோடு சமாதானமாய் இருத்தல் போன்றவற்றில் நம்மைத் தவறிழைக்கச் செய்து வஞ்சனை செய்கிறான் பிசாசு. அதனால் தான் பவுல் – நாம் வேத வாசிப்பு, சபைக் கூடுதல், ஜெபம் பண்ணுவது இவைகளில் நிலைத்திருந்து அவனுடைய வஞ்சகங்களை மேற்கொள்ள வேண்டும் என்கிறார் [எபே. 6:11].

பழைய ஏற்பாட்டில் தாவீது தன் படை பலத்தை எண்ணிக்கையிட்டு பெருமைப்பட தூண்டியவன் சாத்தான் [2 நாளா. 21:7] இன்றைக்கும் நமக்குள்ளது எல்லாம் தேவனால் உண்டாயிருப்பது என நாம் உணராவிட்டால் நாமும் அப்படிப்பட்ட ஜீவனத்தின் பெருமைக்கு ஆளாக நேரிடும் என்பதை மறந்து விடக்கூடாது. அதேபோல புதிய ஏற்பாட்டில் இயேசுவைக் காட்டிக்

கொடுக்கும்படி யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான் (லூக்கா 22:3) என வாசிக்கின்றோம். அதற்குக் காரணம் அவனுடைய பொருளாசையே. இதுவும் ஒரு வஞ்சகமான பாவமாகும். அநேகர் இதில் விழுந்து தேவனை விட்டு விலகிப் போகிறார்கள். இந்தப் பொருளாசை விக்கிரக ஆராதனை மற்றும் விபச்சாரப் பாவத்திற்கு இணையானது என்கிறது அப். உபதேசம் (எபே. 5:5) அனனியா, சப்பிராளை பரிசுத்த ஆவிக்கு விரோதமாக பொய் சொல்ல சாத்தான் தூண்டியதும் நாம் அறிந்ததே (அப். 5:3).

***இரண்டாவதாக மனுஷர் தரும் ஆலோசனை*** – அது பெரும்பாலும் தவறாகவே அமைகிறது. எனவே, யாக்கோபு, ***என் ஆத்துமாவே அவர்களுடைய இரகசிய ஆலோசனைக்கு உடன்படாதே*** என்கிறார் (ஆதி. 49:6). அப்படித்தான் பிலேயாம் இஸ்ரவேலரை மோவாபிய ஸ்திரீகளோடே பாவம் செய்து கர்த்தருக்கு விரோதமாக துரோகம் செய்ய ஆலோசனைக் கொடுத்தான் (எண். 31:16). அது எப்போதோ நடந்தது என்கிறீர்களா ? வாசிப்போம் – வெளி. 2:14 ஆதிசபைகளின் குறைவுகளை சுட்டிக்காண்பித்த ஆண்டவர் பெர்கமு சபையிடம், பிலேயாமைப் பின்பற்றுகிறவர்கள் உன்னிடத்தில் உண்டு என்கிறார். ஒரு மனுஷனுக்கு சத்துரு அவன் வீட்டாரே என்கிறார் இயேசு. வீடு வாசல் இன்றிச் சுற்றித்திரிந்த நம் ஆண்டவருக்குக் கூட தேவ சித்தம் செய்ய தடையாக ஆலோசனை சொன்ன பேதுருவிடம் ***எனக்கு பின்னாகப்போ சாத்தானே*** என்றார் இயேசு. சொந்தத் தாயாகிய அத்தாலியாள் அகசியா ராஜாவை துன்மார்க்க ஆலோசனைக்கு வழி நடத்தினாள் (2 நாளா. 22:2).

மனுஷரில் நல்ல ஆலோசனைத் தந்தவர்களும் உண்டு. மோசே தன் மாமன் ஆலோசனையைக்கேட்டு நலமடைந்ததை யாத். 18:19 காண்கிறோம். ஆனால், அதைப் போன்ற முதியோரின் நல் ஆலோசனைகளைத் தள்ளி சிம்சோன் (நியா. 14:3) மற்றும் ரெகொபெயாம் (1 ராஜா. 12:8) போன்றோர் கெட்டுப் போனார்கள். அப்படிப் போல ஊழியர்கள் மற்றும் முதியோர் ஆலோசனைகளைத் தள்ளும்போது தேவ கோபம் அவர்களைச் சிதற அடிக்கும் (புலம். 4:16) மனுஷருடைய ஆலோசனைகளை தேவன் அபத்தமாக்கி விடுவார். சீரியா ராஜாவின் திட்டம் எலிசா மூலம் அபத்தமாக்கப்பட்டது (2 ராஜா. 6:12) அதேபோல தகப்பனின் ராஜ்ஜியத்தை அபகரிக்க நினைத்த அப்சலோமுக்கும் நடந்தது (2 சாமு. 17:14).

***இறுதியாக தேவ ஆலோசனை*** – இது சபை நடத்தும் மூப்பர்கள் மற்றும் ஊழியர்கள் மூலம் கிடைக்கிறது. எண். 27:21 பழைய ஏற்பாட்டில் ஆசாரியன் கர்த்தருடைய சந்நிதானத்தில் ஆலோசனை கேட்டு சபையாருக்குத் தெரிவித்தான். இப்போது போதிக்கிறவன் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன் என்கிறார்

(1 பேதுரு 4:11) நம் தேவனுடைய ஆலோசனைகள் அருமையானவைகள் (சங். 139:17) அது நமக்கு மகிமையைக் கொண்டு வரும் சங். 73:24. பழைய ஏற்பாட்டில் தேவனுடைய ஆலோசனையின்படி கேட்டு, நடந்த யுத்தத்தில் ஜனங்கள் பெரிய வெற்றியைப் பெற்றுக் கொண்டார்கள். நம் மன அமைதிக்கு இயேசு சொன்ன முக்கிய ஆலோசனை என்னவென்றால் அது சாந்தமும், மனத்தாழ்மையுமே (மத். 11:29) இதை நாம் உலகில் எந்தக் கல்வி நிறுவனத்திலும் படிக்க முடியாது. நம் ஆண்டவர் இயேசுவிடம் மாத்திரமே கற்கமுடியும். மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்காது. அதை சூரியன் அஸ்தமிக்கும் முன் அன்றே விட்டு விட வேண்டும்.

அதேபோல ஜீவனத்தின் பெருமை இவ்வுலகத்திலிருந்து வந்தது. பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் (யாக். 4:6). இறுதியாக சபைக்கு ஆண்டவரின் ஆலோசனை – ஐசுவரியவனாக அவரிடம் ***பொன்னாகிய விசுவாசத்தையும், கறைபடாத ஆடையாக வெண்வஸ்திரத்தையும்*** ( 1 பேதுரு 1:7, யூதா 1:23) பார்வையடைய மனக்கண்களையும் (எபே. 1:19) நாம் பெற வேண்டும் என்று சபைக்கு ஆலோசனை கூறுகிறார் வெளி. 3:18. ஆகவே, நாம் தேவ ஆலோசனையின்படி நடந்து முடிவில் மகிமைப் பெற்றுக் கொள்வோம். தேவக் கிருபை நம் அனைவரோடுங்கூட இருப்பதாக ஆமென்.

†

## திரும்ப வனைந்த பாண்டங்கள்

*1 .**யோனாவுக்கு இரண்டாம் விசை கர்த்தர் வார்த்தையை தந்தார்.** (யோனா 3:1,2)*

*2. **குருடனின் கண்களை இரண்டாம் விசை கர்த்தர் தொட்டார்.** (மாற்.8:22-25)*

*3. **சிம்சோனை இரண்டாம் விசை கர்த்தர் ஆவியில் நிரப்பினார்.** (நியா.16:28-30)*

*4. **பேதுருவை இரண்டாம் விசை கர்த்தர் சந்தித்தார்.** (யோவான்.21-3-7)*

(சகோ. தீமோன் ஸ்ரீதர் – சென்னை)

பாடம் – 6

# பூமியையும் அதிலுள்ள சகல ஜீவராசிகளையும் தேவன் படைத்தார் என நாம் எப்படி அறிகிறோம்?


*தமிழில். Bro. D. சாமுவேல் ராஜ், சத்தி*



**பூ**மியையும் அதிலுள்ள ஜீவராசிகள் அனைத்தையும் தேவன் படைத்தார் என நாம் தெரிந்து கொள்வது எப்படி? நாம் காணும் பல பொருட்களும் தேவன் படைத்ததால் அன்றி வேறு எந்தவிதத்திலும் உண்டாயிருக்க இயலாது என்பதை ஏற்றுக்கொள்ளுவது, இக் கேள்விகளுக்கு நாம் பதில் தெரிந்து கொள்ளக்கூடிய வழிகளில் ஒன்று. ரோமர் 1ம் அதிகாரம் 19, 20 வசனங்களில் நாம் படிக்கிறோம். தேவனைக் குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்திருக்கிறார். எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே. உலகம் உண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும். ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை.

தேவன் இருப்பதைச் சந்தேகிப்பது முட்டாள்தனம் மட்டுமல்ல ஆனால், தேவன் இருப்பதை அறிய அவர் படைத்துள்ள பொருட்களைக் காண்பது ஒரு வழியாகும் என வேதாகமும் நமக்குச் சொல்கிறது. அடிப்படையில், தேவன் திட்டமிட்டு வடிவமைத்ததால் மட்டுமே இக்காரியங்கள் வந்துள்ளனவே தவிர, வேறு எந்த வழியிலும் இவை வர முடிந்திருக்காது என்பதை ஏற்றுக் கொள்ளுவதே இதற்கு அர்த்தம்.

வலது பக்கத்தில் உள்ள படத்தில் ஒரு பூமி உருண்டையையும், ஒவ்வொரு ஆண்டும் ஒரு சிறு பறவை நடத்தும் நீண்ட ஒரு பயணத்தின் தடத்தையும் நீர் காண முடியும். இந்த வடதுருவக் கடற்பறவை ஒவ்வொரு ஆண்டும் அலாஸ்காவின் வடபகுதியிலும் கனடாவிலும் அமைந்துள்ள தங்கள் கூடுகளை விட்டுப் புறப்பட்டு 24,000 மைல்கள் பயணப்பட்டு, தென் அமெரிக்காவின் தெற்கு ஓரத்திற்கு வந்துவிட்டுத் திரும்புகின்றன. இருபத்து நான்காயிரம் மைல்கள் கொண்ட வியக்கத்தக்க இந்த நீண்ட பயணத்தை இந்தச் சிறிய பறவை ஒவ்வொரு ஆண்டும் எப்படி மேற்கொள்கிறது! பெற்றோர்கள் கற்றுக் கொடுத்ததை அக்குஞ்சுகள் கற்றுக்கொண்டு நீண்ட தூரம் பறக்கின் றன என சிலர் கருதுகின்றனர். ஆனால், விஞ்ஞானிகள் ஒரு குஞ்சு பறவையை எடுத்து, எந்தப் பறவையின் தொடர்பும் அற்ற, விஸ்கான்சினில் உள்ள மாடிசன் என்ற இடத்தில் வளர்த்து, பின்னர் அதை முட்டையிலிருந்து அது வெளிப்பட்ட இடத்திற்கே திருப்பிக் கொண்டு போய், அங்குள்ள பறவைகள் அனைத்தும் பறந்து சென்ற பின்னர், அதை விடுவித்தபோதும் கூட, அது தெற்கு அமெரிக்காவின் தெற்கு ஓரத்தில் உள்ள தனது பெற்றோர்களிடம் பறந்து சென்று விட்டது. நிச்சயமாக அந்தக் குஞ்சுக்கு அந்த வழியைப்பற்றி எதுவும் தெரியாது. ஏனெனில், எந்தப் பறவையோடும் அதற்கு தொடர்பு இல்லாதிருந்தது. என்றாலும் அந்தப் பயணத்தை அந்தக் குஞ்சினால் சரியாக செய்ய முடிந்திருக்கிறது.



சகல பொருட்களும் பரிணாம வளர்ச்சியால் தற்போதைய நிலையை அடைந்துள்ளன என நம்புகிற ஒரு மனிதன். பறவை உயிர் வாழ வேண்டியதிருப்பதால் அதனுடைய பாதையில் அது பறக்கிறது என உங்களிடம் சொல்லக்கூடும். வட அலாஸ்கா, கனடா நாடுகளின் குளிர்கால குளிர்ந்த காற்றை தாங்க இயலாமல் பறவைகள்

அங்கிருந்து வெளியே பறந்து செல்வதாக அவர்கள் கூறுவார்கள்.

காலநிலையின் மாறுபாட்டிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள, அந்தப் பறவையை தேவன் அங்கிருந்து பறந்து போகச் செய்கிறார் என்பதில் எந்தக் கேள்விக்கும் இடமில்லை. ஆனால், அந்தப் பறவை குளிரிலிருந்து தன்னைப் பாதுகாக்க மட்டுமே வெளியேறுவதாக இருப்பின், ஏன் வெகுதூரத்திலுள்ள தென் அமெரிக்காவுக்குச் செல்ல வேண்டும்? கூடுதலாக 6000 மைல்கள் பறந்து செல்வதற்குப் பதிலாக ஏன் மியாமியில் தனது பயணத்தை நிறுத்திக் கொள்ளவில்லை?

உண்மை என்னவென்றால், அந்த வடதுருவ கடற்பறவைக்காக மட்டும் தேவன் திட்டமிடவில்லை. ஆனால், அந்தப் பறவை வாழும் இடத்திலுள்ள பிற மிருகங்களுக்கும் செடிகளுக்கும் கூடத்தான் திட்டமிட்டுள்ளார். கடற்பறவையின் எச்சம் செடிகளுக்கு உரமாகப் பயன்படுத்தப்படுகின்றன. பல மிருகங்கள் இப்பறவைகளின் முட்டைகளில் சிலவற்றை உணவாகக் கொள்ளுகின்றன. கடற்பறவையைச் சார்ந்துள்ள வேறு பறவைகள் புழு, பூச்சிகளை உண்கின்றன. தமது சகல ஜீவராசிகளுக்கும் ஒரு சிறப்பான வழியிலே தேவன் உணவளிக்கிறார். இந்தக் கடற்பறவை அவருடைய அந்த ஏற்பாட்டின் ஒரு சிறு பகுதியே. இது தற்செயலாக நிகழக்கூடியதற்கான வழி எதுவும் இல்லை.

தேவனுடைய திட்டத்திற்கு கங்காரு மற்றுமோர் உதாரணமாக இருக்கிறது. வலது பக்கத்து படத்தில் ஒரு தாய் கங்காருவையும் மிக நன்கு வளர்ந்த கங்காருக் குட்டியையும் நீங்கள் பார்க்கிறீர்கள். ஆனால், இரண்டாவது படத்தில் பிறந்த உடனே உள்ள சின்னஞ்சிறு கங்காரு குட்டியை நீங்கள் பார்க்கிறீர்கள்.



தொடரும்...

## கருத்தாய் என்ன செய்ய வேண்டும் ?

*1.ஜெபிக்க வேண்டும். [யாக்.5:17]*

*2.கர்த்தரைத் தேட வேண்டும். [ஓசியா.5:15]*

*3.வசனத்தை பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும். [உபா.6:7]*

[சகோ. தீமோன் ஸ்ரீதர் - சென்னை]

# எபிரெயர் 2 ஆம் அதிகாரம்

*Bro.V. ஆசீர்வாதம், சென்னை*

*[சென்ற மாத இதழின் தொடர்ச்சி...]*

மேலும், யோவான் 17:26ல் உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன் என்று சொன்னார். மேலும், சபை நடுவே உம்மைத் துதித்துப் பாடுவேன் என்றும் சொன்னார். சபை என்பது சரீரமாயிருக்கிறது. அந்த சரீரத்திற்கு கிறிஸ்து தலையாக இருக்கிறார். அந்த தலையின் மூலமாகத்தான் அதாவது, அந்த நாமத்தின் மூலமாகத்தான் தேவனை மகிமைப்படுத்த முடியும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினாலே மகிமைப்படுத்துகிறோம் [ரோமர். 15:5].

மனுஷனுடைய வாய் பேசும்போது, அந்த சத்தம் சரீரத்தின் நடுமையத்திலிருந்து வரும். அந்த சத்தம் இயேசு என்கிற பெயரால் விண்ணப்பங்களையும், துதியின் பலிகளையும் தேவனுக்கு சமர்பிக்கும். நாம் தேவனுக்கு ஆராதனை செய்கையில் கிறிஸ்து நம்மோடு இணைந்திருக்கிறார் என்பதை இது குறிக்கும். மேலும், நான் [இயேசு] அவரிடத்தில் அதாவது பிதாவினிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன் என்றும், நான் மாத்திரமல்ல தேவன் எனக்குக்கொடுத்தப் பிள்ளைகளுமாகிய நாங்கள் எல்லாரும் தேவன் மேல் நம்பிக்கையாய் இருப்போம். அதாவது, நாங்கள் சபையாக கூடி, பாடி தேவனை மகிமைப்படுத்துவோம். தேவனிடத்தில் நம்பிக்கையாயிருப்போம் என்று இயேசு சொல்லுகிறார் [ஏசா.8:17–18].

**2:14 ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார். மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்,2:14-15.**

**I. மாம்சமானார்......**

யோவான் 1:1ல் வார்த்தையாக இருந்தவர் யோவான் 1:14ல் மாம்சமானார். ரோமர் 8:3ல் தேவன் தம்முடைய குமாரனை பாவமாம்சத்தின் சாயலாக அனுப்பினார். பிலி. 2:6ல் இயேசுவானவர் பரலோகத்தின் மகிமையை இழந்து தம்மை வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார்.

**II. இயேசுவானவர் ஏன் மாம்சத்திலே வந்தார்?**

ரோமர் 8:3 நியாயப்பிரமாணம் செய்யக் கூடாததை தேவனே செய்வதற்கும், பாவத்தை நீக்கும் பலியாகவும் தேவன் தமது குமாரனை அனுப்பினார். எபி 10:5 ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இயேசுவானவர் யாரை இரட்சிக்க வேண்டுமோ அவர்கள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர் களாய் வாழ்கிறார்கள். அவர்களுக்கு பாவ மன்னிப்பை ஏற்படுத்த, தாமும் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவராய் வந்தார். இயேசுவானவர் மாம்சத்தில் வருவதற்கு உண்டான காரணங்கள்:

1. மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனை தம்முடைய மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்,

2. மரணபயத்தினாலே அடிமைப்பட்டவர்களை விடுதலை பண்ணும் படிக்கும்,

3. ஆபிரகாமின் சந்ததியராகிய விசுவாசிகளுக்கு கைக்கொடுத்து அவர்களைத் தூக்கிவிடுகிறதற்கும்,

4. தம்முடைய சகோதரர்களுக்கு பாவமன்னிப்பை ஏற்படுத்த பிரதான ஆசாரியராய் இருக்கும்படிக்கும், இயேசுவானவர் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவராய் வந்தார்.

**III. இதோ நானும் தேவன் எனக்கு கொடுத்த பிள்ளைகளும் (எபி. 2:13-14)**

இயேசுவானவருடைய இரத்தத்தினாலே புது சிருஷ்டிகள் கிறிஸ்துவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதால் [எபே. 2:15] அந்த புது சிருஷ்டிகள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறார்கள். ஏனென்றால், இயேசுவின்மேல் விசுவாசமுள்ளவர்கள் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, இயேசுவானவர் அதிகாரம் கொடுத்திருக்கிறார் [யோவான் 1:12]. மேலும், நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்று ஆவியானவரும் சாட்சிக் கொடுக்கிறார் [ரோமர் 8:16]. தேவனும் இயேசுகிறிஸ்துவுக்குள் நம்மை சுவிகாரப்பிள்ளைகளாய் ஏற்றுக் கொண்டார் [எபே. 2:6]. எனவே, பிள்ளைகள் எனப்படுவது இயேசுகிறிஸ்துவுக்குள் சிருஷ்டிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறவர்களைக் குறிக்கும். இயேசுவானவர் நம்மை பிள்ளைகளே என்று அழைக்க உரிமையுள்ளவராய் இருக்கிறார். ஆகையால், இயேசுவானவரோடுகூட இணைந்தவர்களாய் நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்.

**IV. மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனை அழிக்கும்படிக்கு (எபி. 2:14)**

பிசாசானவன் மனித சமுதாயத்தை பாவத்திற்கு வழிநடத்தி,

மரணத்தைக்கொண்டு வந்தான். ரோமர் 5:12–ன்படி எல்லாரும் பாவம் செய்தபடியால், எல்லாருக்கும் மரணம் வந்தது ரோமர் 5:17ல் மரணம் ஆண்டுக்கொண்டிருக்க என்றும், 1 யோவான் 5:19ல் உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் (பிசாசுவுக்குள்) கிடக்கிறது என்றும், சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, பிசாசை தன் மரணத்திலே அழிக்க வந்தார்.

**மனித சமுதாயம் இரட்சிக்கப்படும்படிக்கு இயேசுவானவர் வந்தார்:**

2 கொரி.5:14ல் எல்லாருக்காகவும் ஒருவரே மரித்தார். எபி. 2:9ல் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார். அதாவது, மனித சமுதாயத்தின்மேலிருந்த மரணத்தை தாமே ஏற்றுக்கொண்டார். ஒவ்வொரு மனுஷ ஆத்துமாவும் ஞானஸ்நானத்தின் மூலம் தம்மோடு மரிக்கவும், அடக்கம் பண்ணப்படவும், உயிர்த்தெழவும் வகை செய்தார். மனிதன் ஞானஸ்நானம் பெறும்போது, அவன்மேலிருந்த மரணம் என்னும் தண்டனை கிறிஸ்துவின்மேல் சுமத்தப்படுகிறது. அவன் மரணத்திலிருந்து காப்பாற்றப்படுகிறான் அல்லது இரட்சிக்கப்படுகிறான். இரட்சிப்பு ஞானஸ்நானத்தில் நிறைவேறுகிறபடியினால் பிசாசும், அவனுடைய தூதர்களும் இரட்சிக்கப்பட வாய்ப்பில்லாமல் போகிறது. பிசாசுக்காகவும் அவனுடைய தூதர்களுக்காகவும் நியமிக்கப்பட்ட நித்திய அக்கினி அதாவது, நித்திய அழிவு நிலைத்திருக்கிறது (மத். 25:41). இவ்விதமாய் பிசாசு இரட்சிக்கப்பட வழியில்லாமல் தனிமைப்படுத்தப்படுகிறான். மனித சமுதாயத்தின்மேல் மரணத்தை கொண்டுவந்த பிசாசு, தான் கொண்டுவந்த மரணத்தினாலே தானே அழிகிறான். இவ்விதமாய் மனிதனுக்கு இரட்சிப்பும், பிசாசுக்கு அழிவும் நியமிக்கப்பட்டது.

**2:15 ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்.**

**2:15 மரண பயத்திற்கு அடிமைப்பட்டவர்களை விடுதலையாக்கினார்:**

மரணம் என்பது தேவனுக்கும் மனிதனுக்குமிடையே இருக்கும் ஆவிக்குரிய பிரிவினையாகும். ஏசா. 59:2ன்படி, உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும். உங்கள் தேவனுக்கும் நடுவாக பிரிவினையை உண்டாக்குகிறது. லூக். 1:78ன்படி எல்லாரும் அந்தகாரத்திலும், மரண இருளின் திசையிலும் உட்கார்ந்துக் கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய வழியை அறியாதபடிக்கு தங்கள் இருதயத்தைக் கடினமாக்கினார்கள். இருதய கடினத்தினால், அறியாமை உள்ளவர்களானார்கள். அறியாமையினாலே, புத்தி அந்தகாரமாயிற்று. அதாவது, இருள் சூழ்ந்துக்கொண்டது (எபே. 4:18).

ஒருவனும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப்

போகக்கூடாது (எபி 3:13). அதாவது, பாவம் வஞ்சிப்பதினாலேஇருதயம் கடினமாகிறது. இருதயம் கடினமாகும்போது, அறியாமை உண்டாகிறது. அறியாமை உண்டாகும்போது, புத்தி அந்தகாரமாகி உணர்வில்லாத அந்த இருதயத்தை இருள் சூழ்ந்துக்கொள்கிறது (ரோமர் 1:21), இருள் என்பது, தான் போகுமிடத்தை அறியாமல் இருப்பது (யோவான் 12:35, 1 யோவான் 2:11). இருளானது அவன் கண்களை குருடாக்கினபடியால், தான் போகுமிடம் இன்னதென்று அறியாதிருக்கிறான். இப்பொழுது அவனுக்கு இருக்கிற ஒரே பயம், மரண பயமாகும். தன் வாழ்நாள் முழுவதும் அந்த பயத்திற்கு மனிதன் அடிமைப்பட்டு, செத்துக்கிடக்கிறான். 2 கொரி. 4:6ன்படி இயேசுகிறிஸ்துவின் முகத்திலுள்ள அறிவாகிய ஒளி என்று சொல்லப் பட்டிருக்கிறபடியால், ஒளி என்பது அறிவு என்று அறிகிறோம். இந்த ஒளி சுவிசேஷத்தினால் அவனுக்கு உண்டாகும்போது, அவன் பிரகாச மடைகிறான்.

யோவான் 8:12ல் இயேசுவைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல், அதாவது, அறியாமை என்னும் இருளில் இராமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான். அதாவது, தன் ஆத்துமா வாழ்வுக்குரிய அறிவை அறிவான். இயேசுவானவர் தேவனை அறியும் அறிவை அடைந்து அவரைத் தொழுதுக்கொள்ளும் முறைமையை போதித்தார். மரித்தோர் உயிர்தெழுதலைப் போதித்தார் (யோவான் 5:29), நியாயத்தீர்ப்பை போதித்தார் (யோவான் 5:22). ஆத்தும வாழ்வைக்குறித்துப் போதித்தார் (மத். 16:26), நித்திய ஜீவனைக் குறித்து வாக்குத்தத்தம் பண்ணினார் (யோவான் 5:24, 6:47,54). இவ்வாறு இயேசுவானவர் ஆத்துமாவுக்குரிய நம்பிக்கையை ஏற்படுத்தினார். 2 கொரி. 5:7–9வரை சரீரத்தில் வாழ்ந்தாலும், மரித்தாலும் கர்த்தருக்கு பிரியமானவர்களாக இருக்கிறோம். ரோமர் 14:7–8ல் நாம் வாழ்ந்தாலும், மரித்தாலும் கர்த்தருடையவர் களாயிருக்கிறோம்.

இவ்வாறு, ஆத்துமாவுக்குரிய வாழ்வை நினைத்து மரண பயத்தை மறந்து நித்திய வாழ்வுக்கு காத்திருக்கிறவர்களாய் மாற்றினார். அதாவது, மரண பயத்திலிருந்து விடுதலையாக்கினார்.

**2:16 ஆதலால், அவர் தேவதூதருக்கு உதவியாகக் கைகொடாமல், ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகக் கைகொடுத்தார்.**


**2:16 தேவதூதருக்கு உதவியாக ஏன் கைக்கொடுக்கவில்லை?**


ரோமர் 3:23ன்படி மனிதர்கள் பாவம் செய்தார்கள்.

11பேதுரு2:4ன்படிதேவதூதர்களும் பாவம் செய்தார்கள்.

*தொடரும்...*


## 12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும். தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

















## World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Tuesday 6.30 - 7:00 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7.30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



**"Registered" with RNI No: TNTAM/2006/20466**
Postal regn. No. Erode/26/2024 - 2026
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2024 - 2026**
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.

**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்


## எங்களது இதர வெளியீடுகள்

**தபால் செலவிற்கு பணம் அனுப்பி**
**இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**


















## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு
இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701. தமிழ்நாடு, இந்தியா.

**To:**

**திருமறை தியானம்**

**நம்பிக்கை TV**
செவ்வாய் – காலை 6:30 – 7:00 மணி

**நம்பிக்கை TV**
வெள்ளி – காலை 7:30 – 8:00 மணி

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.